72

# சங்க இலக்கியமும் வேளாண்மையும்

**மு. அஜீத் குமார்,**

**தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி,**

**தாம்பரம் - 59**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககால மக்கள் குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நில அமைப்புகளுக்கேற்ப உற்பத்தி முறைகளை மேற்கொண்டனர். அவற்றுள் குறிஞ்சி , முல்லை, மருதம் ஆகிய மூன்று நில அமைப்புகளில் மக்களின் உணவு உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்வதாக வேளாண்மை திகழ்ந்துள்ளது. அவற்றைச் சங்க இலக்கியங்களின் பதிவுகள் வழி அறிய முடிகிறது. அப்பதிவுகளில் வேளாண்மை நிகழ்த்தப்படும் நிலங்களின் தன்மைகள் குறித்தும் , பயிர்கள் பயிரிடப்படும் முறைகள் குறித்தும் செய்திகள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியங்கள் வேளாண்மை செய்ய உகந்த மற்றும் உகாத நிலங்கள் என நான்கனையும், பயிர்கள் பயிரிடப்படும் முறைகள் என இரண்டனையும் பகுத்துக் காட்டுகிறது. அதனைப் புலப்படுத்துவதாகவும் விவரிப்பதாகவும் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**முன்னுரை**

உணவு மனிதனின் உயிர்வாழ் ஆதாரங்களுள் ஒன்று. அவற்றை உற்பத்திச் செய்யும் தொழிலாய் , கற்காலம் துவங்கி தற்காலம் வரை வேளாண்மையானது திகழ்கிறது. இத்தகைய வேளாண்மை நிகழ்த்தப்படும் நிலங்களின் தன்மைக் குறித்தும் பயிரிடல் முறைகள் குறித்தும் சங்க இலக்கியங்களில் பலப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றினைச் சுட்டி விளக்குவதாய் , இக்கட்டுரையானது அமையப்பெற்றுள்ளது.

**வேளாண் நிலவமைப்புகள்**

தொல்காப்பியம் நிலவமைப்பு உள்ள நான்கு நிலப்பரப்பைச்(குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல்) சங்க இலக்கியங்களின் வழியே சுட்டுவதைப்போல் , வேளாண்மை செய்ய உகந்த மற்றும் உகாத நான்கு நிலவமைப்புகளைச் சங்க இலக்கியங்கள் வழி சுட்டிக் காட்டலாம். அந்நான்கு நிலவமைப்புகளையும் அவற்றின் தன்மைகளையும் பின்வரும் வரைபடத்தின் வழி அறியலாம்.

மேற்கண்ட வேளாண் நில அமைப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்களில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வன்புலக் காட்டுநாட் டதுவே (நற்றிணை, 59:6)

வன்புலக் கேளிர்க்கு வரு விருந்து அயரும்

மென்புல வைப்பின் நன் நாட்டுப் பொருந (புறநானூறு, 42:17-18)

புன்புலம் வித்தும் வன்கை வினைஞர் (பதிற்றுப்பத்து, 58:15)

களர்படு கூவல் தோண்டி (புறநானூறு 311:1)

**பயிரிடல் முறைகள்**

சங்க இலக்கியங்கள் , வேளாண் சூழலமைவுகள் அடிப்படையில் பகுக்கப்பட்ட இரு வகையான பயிரிடல் முறைகளையும் புலப்படுத்துகிறது. அவற்றைப் பின்வரும் வரைபடத்தின் வழி அறியலாம்.

புஞ்செய் பயிரிடல் எனப்படுவது வானம் பார்த்து வேளாண்மை செய்யப்படும் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இத்தகைய நிலப்பரப்பானது மழை காலங்களில் மட்டும் வேளாண்மை செய்ய உகந்ததாக உள்ளது. இது குறுகியக் காலப் பயிர்களைக் ( 3 - 6 மாதப் பயிர்கள்) கொண்ட , ஒரு போக விளைச்சல் நிலமாகும்.

(போகம் என்பது பயிரானது விதைக்கப்பட்ட காலத்திற்கும் அதனை அறுவடை செய்யப்படும் காலத்திற்கு இடைப்பட்ட காலமாகும்.)

நஞ்செய் பயிரிடல் நீர்வள ஆதாரங்களைக் கொண்டு நிகழ்த்தப் பெறும் வேளாண்மை முறையாகும். அதாவது ஆறு , குளம், குட்டை முதலிய நீர்வளம் நிறைந்த நிலப்பரப்பில் நிகழ்த்தப் பெறும் வேளாண்மையாகும்.

இத்தகைய நிலங்கள் குறுகியக் காலப் பயிர் வேளாண்மை 2 முதல் 3 போகம் விளைவிக்க உகந்ததாகவும், நீண்ட காலப் பயிரான ஆண்டுக்கு ஒரு முறை விளைவிக்கும் பயிர்கள் விளைவிக்க உகந்ததாகவும் விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் புஞ்செய் பயிரிடல் மற்றும் நஞ்செய் பயிரிடல் குறித்தப் பலப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. அவற்றுள் புஞ்செய் பயிரிடல் குறித்து கபிலரால் பாடப்பட்ட புறநானூறு பாடலின் வரிகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ் சுவல்
கார்ப் பெயர் கலித்த பெரும் பாட்டு ஈரத்துப்,
பூழி மயங்கப் பல உழுது, வித்திப்
பல்லி ஆடிய பல்கிளைச் செவ்விக்
களை கால் கழாலின், தோடு ஒலிபு நந்தி,
மென் மயிற் புனிற்றுப் பெடை கடுப்ப நீடிக்,
கருந்தாள் போகி, ஒருங்கு பீள் விரிந்து,
கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து,
வாலிதின் விளைந்த புது வரகு அரியத்
தினை கொய்யக், கவ்வை கறுப்ப, அவரைக்
கொழுங்கொடி விளர்க் காய் கோட்பதம்ஆக,
நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்
புல் வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து (புறநானூறு. 120:1-13)

இப்பாடலின் முதல் மூன்று வரிகளில் கபிலர் , கோடைகாலத்தில் வேங்கைமரம் இருக்கும் நிலத்தை எரியூட்டி; கார்காலத்தில் வேளாண் நிலமாக மாற்றியமைத்து வரகு விதைத்ததைப் பதிவு செய்கின்றார் ; அடுத்த எட்டு வரிகளில் வரகு செழித்து வளர்ந்து அறுவடை செய்யும் நிகழ்வு வரை மேற்கொள்ளும் பணிகளையும், நிலத்தின் ஓரம் விதைக்கப்ப அவரைக் கொய்வதனையும் பதிவு செய்கின்றார். அடுத்த

இரண்டு வரிகளில் புதைத்து வைத்தத் தேறலையும் மேற்கூறப்பட்ட வரகு , அவரையையும் சரிசமமாக அக்குடிமக்கள் பகிர்ந்துக் கொள்வதையும் பதிவு செய்துள்ளார்.

நன்செய் பயிரிடலுக்கு அடிப்படை ஆதரமாகத் திகழும் நீர் வளத்தைச் சிறப்பிக்கும் வகையில் , மாங்குடி மருதனாரால் இயற்றப்பெற்ற மதுரைக்காஞ்சிப் பாடலின் வரிகள் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளன.

கல் காயுங் கடுவேனி லொடு
இரு வானம் பெயலொ ளிப்பினும்
வரும் வைகல் மீன் பிறழினும்
வெள்ளமா றாது விளையுள் பெருக
நெல்லி னோதை அரிநர் கம்பலை (மதுரைக்காஞ்சி. 106-110)

இப்பாடல் வரிகளின் பொருளானது , மலையை வறலச் செய்யும் கோடைக்காலமாக இருப்பினும் கருமேகங்கள் மழையைப் பொழியாவிட்டாலும் சூரியன் தன் உதிக்கும் திசையை மாற்றிக் கொண்டாலும் வைகை ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் நீரின் தன்மையை மாற்ற இயலாது. இதனால் நெல் விளைச்சல் அதிகரிக்கும் என்பதாகும்.

பயிர் வேளாண்மை 10000 ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் தினை , சாமை முதலிய பயிர்கள் 7000 முதல் 10000 ஆண்டுகளாக மரபு சார்ந்த முறையில் பயிரிடப்படும் பயிர்களாகவும், நெல், கரும்பு, பருத்தி முதலியப் பயிர்கள் 6000 முதல் 9000 ஆண்டுகளாக, தென்னிந்தியா துவங்கி மைய இந்தியா வரைப் பயிரிடப்படும் பயிர்களாகவும் உள்ளன என ரத்னகரின்( Ratnagar) பியிங் ட்ரைபல்(Being Tribal) என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது(பக்தவத்சல பாரதி , 2014:84). அதுமட்டுமின்றி ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் கி.மு. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தானியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**புஞ்செய்ப்பயிரிடல் முறையும் காட்டெரிப்பு வேளாண் முறையும்**

வேடர்கள் சமூகத்தைவிட பண்பட்ட சமூகங்களான கானக்குறவர் , குன்றக்குறவர், புனக்குறவர், பல்கிளைக்குறவர், மலை உறை குறவர் , குடிக்குறவர், கானவன், சிறுகுடிக்கானவன், புனவன், நாடன், குன்றுவர் முதலியனவர்கள் பண்டமாற்று நிகழ்த்துவதில் சிறந்து விளங்கியுள்ளனர்(பக்தவத்சல பாரதி , 2014:57). இவர்கள் புல்லின உயிர்களின் வழி வேளாண்மை முறை தோன்ற வழி வகுத்தவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களுள் கானக்குறவர்கள் தலையாவர்களாவர். கானக்குறவர்கள் மலைச்சரிவுப் பகுதியை வாழ்விடமாகப் பெற்றிருந்துள்ளனர் (பக்தவத்சல பாரதி , 2014:57). இவர்கள் மேற்கொண்ட விவசாய முறையானது இயற்கைச் சூழலை மையமாகக் கொண்ட புன்செய் முறையாகும். இதன் அடுத்த படிநிலையாகவே காட்டெரிப்பு வேளாண்மை திகழ்கின்றது. காட்டெரிப்பு வேளாண்மை குறித்த பதிவுகளும் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அவற்றுள் புற பாடல் ஒன்றின் வரிகள் பின்வருமாறு அமையப் பெற்றுள்ளன.

எரிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்அழல்,
குருகினும் குறுகுக; குறுங்காது சென்று,
விசும்பஉற நீளினும் நீள்க; பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே. (புறநானூறு, 231)

மேற்கண்ட புறநானூறு பாடலானது , அதியமான் நெடுமானஞ்சி இறந்ததன் பொருட்டு அவனின் புகழினை மேம்படுத்தும் நோக்கில் பாடப்பட்டுள்ளது. இப்பாடலின் முதல் இரண்டு அடிகள் காட்டெரிப்பு வேளாண் நிலத்தின் தன்மையைப் புலப்படுத்துகின்றன. மலையில் வாழ்கின்ற குறவன் கட்டெரிப்பு வேளாண்மை நிலத்தை உருவாக்கிட , வெட்டி எரியூட்டப்பட்ட கரிக் கட்டையால் அதியமானுக்கு ஈமச் சடங்கினை நிகழ்த்தும்படி ஔவையாரால் பாடப்பெற்றுள்ளது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் சங்ககால மக்களின் வாழ்வியலைப் புலப்படுத்துகின்றன. அவைகள் சங்ககால மக்களின் உற்பத்தி முறைகள் குறித்த தெளிவுப்பெற துணை நிற்கின்றன. அவற்றுள் இக்கட்டுரை வேளாண்மை உற்பத்தி முறைக்கு ஆதாரமான நிலங்களின் தன்மைகளையும் , அவற்றில் பயிர்கள் பயிரிடப்படும் முறைகளினையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

**துணை நூற்பட்டியல்**

சுப்பிரமணியன்.ச.வே., தமிழ்ச் செவ்வியல் நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600018, 2017.

பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம், புத்தாநத்தம்-621310, 2014.

பாமயன், திணையியல் கோட்பாடு, தடாகம் பதிப்பகம், சென்னை-600041, 2019.